# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இலங்கைப் போக்குவரத்துச் சபை (திருத்தச்) சட்டம்

---

*(2008 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*


*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2008, நவெம்பர் மாதம் 07 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2008 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இலங்கைப் போக்குவரத்துச் சபை (திருத்தச்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச. வ. ஒ. 10/2008

**2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, இலங்கைப் போக்குவரத்துச் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம்.

*2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்கச் சட்டத்தில் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சட்டம் அதன் 1 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. இப்புதிய பிரிவு அச் சட்டவாக்கத்தின் பிரிவு 1அ என்றாற்போன்று பயனுறுதல் வேண்டும் :-

"இலங்கைப் போக்குவரத்துச் சபையைத் தாபித்தல்.

1அ. (1) (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "இலங்கைப் போக்குவரத்துச் சபை" என அழைக்கப்படவேண்டிய சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) சபை (1) ஆம் உட்பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரால் இடையறா வழியுரிமையும் பொது இலச்சினையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும் என்பதுடன், அப்பெயரால் வழக்குத்தொடரலாம் என்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடரவும் படலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "இலங்கைப் போக்குவரத்துச் சபை" என அழைக்கப்படும் சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்

2-PL 003228 -1,300 (2008/09)

(இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப் படும்). 'இது பின்வரும் உறுப்பினர்களைக் கொண் டிருத்தல் வேண்டும்:-'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

*(2)* அப்பிரிவின் (iii) ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும் :-

(iii) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சினது மேலதிக அமைச்சுச் செயலாளரின் பதவி வரிசைக்குக் குறையாத அலுவலர் ஒருவர் அல்லது திறைசேரிச் செயலாளரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட திறைசேரியின் பணிப்பாளர்-தலைமையதிபதி."; அத்துடன்

*(3)* அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பிற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"சபையின் அமைப்பு".

*கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயன்.*

**4**. இச்சட்டத்தின் 1அ என்னும் பிரிவால் முதன்மைச் சட்டவாக்கத்திற்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் முதன்மைச் சட்டவாக்கம் நடைமுறைக்குவரும் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமையின் போது சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387* : (வெளிநாடு) ரூபா *1,849* : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் *15* ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்